OL/2015/62-T-I, II

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

62 T I, II

37200

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2015 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2015 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2015

පුරවැසි අධ්‍යාපනය හා ප්‍රජා පාලනය I, II
குடியுரிமைக் கல்வி மற்றும் சமூக நிர்வாகம் I, II
Citizenship Education & Governance I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

சுட்டெண் :...............................

## (62) குடியுரிமைக் கல்வி மற்றும் சமூக நிர்வாகம் I

※ இவ்வினாத்தாள் **40** வினாக்களைக் கொண்டுள்ளது.
※ ஒவ்வொரு வினாவுக்கும் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப **எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக.**

● **1** தொடக்கம் **10** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை / சொற்களை அடைப்புக்குறிக்குள்ளிருந்து தெரிந்தெடுத்து, **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

**1.** ஜனநாயகத்தின் தாயகமாகக் கருதப்படும் நாடு ........................................ ஆகும்.
(பெரிய பிரித்தானியா / கிரேக்கம் / சுவிற்சர்லாந்து)

**2.** ஜோன்லொக் முன்வைத்த அரசியற் கொள்கை ................................ எனப்படும்.
(பழைய லிபரல் கொள்கை / புதிய லிபரல் கொள்கை / நேரடி ஜனநாயகக் கொள்கை)

**3.** சட்டவாக்கத்தினால் ஆற்றப்படும் பிரதான பணி .................................................. ஆகும்.
(வரவு செலவு திட்டத்தை நிறைவேற்றல் / விவாதங்களை நடாத்துதல் / சட்டங்களை ஆக்குதல்)

**4.** மாகாண சபையொன்றின் கட்டமைப்பு தீர்மானிக்கப்படுவது சனத்தொகை மற்றும் ...................................... அடிப்படையிலாகும்.
(நிலப்பரப்பு / வளங்கள் / இன)

**5.** மாகாண சபையொன்றின் நிதி நிர்வாகத்திற்காக அமைக்கப்பட்டுள்ள மாகாண சபை நிதியத்தின் இறுதிப் பொறுப்பை ஏற்பவர் .......................................... ஆவார்.
(கணக்காளர் / ஆளுனர் / முதலமைச்சர்)

**6.** தமது கலாசாரத்தின் முன்னேற்றத்திற்காக வேறு கலாசார அம்சங்களைச் சேர்த்துக் கொள்வது ...................................... பரவலாகும்.
(நேரடி / இடைதொடர்பு / தூண்டல் ரீதியான)

**7.** மோதல் தவிர்ப்பின் போது தமது கொள்கை மாத்திரம் அல்லாது வேறு தீர்வுகளும் காணப்படுவதனை ஏற்றுக்கொள்வது ........................................... ஆகும்.
(பேச்சுவார்த்தை / மாற்றுக்கருத்து / நடுநிலைப்படுத்தல்)

**8.** சட்டத்திற்கு ஏற்ப ஆளப்படுதல் சட்டத்தின் ...................................... என அழைக்கப்படும்.
(நியாயாதிக்கம் / அதிகாரங்கள் / இறைமை)

**9.** 1978 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பில் பிரசைகளுக்கு உரிய அடிப்படை கடமைகள் பற்றி ........... ஆம் இலக்க உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
(14 / 15 / 28)

**10.** ஐக்கிய நாடுகள் சபையின் பிரதான ஆறு நிறுவனங்களில் ஒன்றாக ........................................ குறிப்பிடலாம்.
(சர்வதேச நிதியத்தை / சர்வதேச நீதிமன்றத்தை / சர்வதேச அபிவிருத்தி சங்கத்தை)

[பக். 2 ஐப் பார்க்க

- **11** தொடக்கம் **20** வரையுள்ள ஒவ்வொரு கூற்றும் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (X) எனவும் எதிரிலுள்ள **அடைப்புக்குறியினுள்** குறிப்பிடுக.

**11.** இங்கிலாந்து பல கட்சி முறை நடைமுறையிலுள்ள ஒரு நாடாகும். (..........)

**12.** கிரேக்கத்தின் அதென்ஸ் நகராட்சியில் நிலவிய நேரடி ஜனநாயக ஆட்சியின் கீழ் பெண்கள் மற்றும் அடிமைகளைத் தவிர ஏனைய பிரசைகள் யாவருக்கும் நிருவாகத்தில் பங்குபற்றும் சந்தர்ப்பம் கிடைத்தது. (..........)

**13.** இலங்கையில் உள்ளூராட்சி நிறுவனங்கள், மாகாண சபைகளினால் நிர்வகிக்கப்படுகின்றன. (..........)

**14.** மனிதர்களின் புற நடத்தையைக் கட்டுப்படுத்த ஒரு அரசாங்கத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களை அழைப்பது 'சட்ட மூலங்கள்' எனவாகும். (..........)

**15.** 'தேசவழமை' சட்டத்தின் கீழ் சொத்துக்களை நிருவகித்தல் முழுமையாக கணவனின் உரிமையாகும். (..........)

**16.** அரசின் ஆகக் கூடிய தலையீட்டுடன் சந்தை செயற்படுவதற்கு இடமளித்தல் சந்தைப் பொருளாதாரமாகும். (..........)

**17.** அதிகாரத்தைப் பகிர்தலுடன் கூடிய அரசு, கூட்டாட்சி அரசு என அழைக்கப்படும். (..........)

**18.** பல கட்சி முறை மூலம் மக்கள் கருத்தைப் பிரதிநிதித்துவப்படுத்த அதிக வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படும். (..........)

**19.** சச்சரவொன்றைத் தவிர்ப்பதற்காக தலையிடும் நபர்/குழு 'யூரி' என அழைக்கப்படுவார்/அழைக்கப்படும். (..........)

**20.** வடக்கு அத்திலாந்து உடன்படிக்கை அமைப்பு அல்லது NATO வலயத்தின் பொருளாதார ஒத்துழைப்புக்காக அமைக்கப்பட்ட நிறுவனமாகும். (..........)

- **21** தொடக்கம் **30** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலுமுள்ள இடைவெளிக்குப் பொருத்தமான சொல்/சொற்களை இட்டுப் பூரணப்படுத்துக.

**21.** 'கென்டன்' என அழைக்கப்படும் 26 பிராந்திய அரசுகள் கொண்ட 'கூட்டாட்சி' நடைபெறும் நாடு .................... .................................................... ஆகும்.

**22.** ஜனாதிபதி முறையின் விசேட இயல்பாவது நிறைவேற்றுத்துறை .................................... பொறுப்புக்கூறக் கடமைப்படவில்லை என்பதாகும்.

**23.** பல்வேறு இன, சமய மற்றும் மொழிக் குழுக்கள் ஒன்றாக வாழும் சமூகமொன்றை ...................................... சமூகம் என அழைப்பர்.

**24.** உற்பத்தியின் போது அல்லது நுகர்வின் போது கிரயமொன்றை ஏற்க நேரிடுவது ........................................ பண்டங்களுக்காகும்.

**25.** நீதிச் சேவை ஆணைக்குழுவின் தலைவர் .................................................... ஆவார். அதேசமயம் மேலும் இரண்டு உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழுவின் ஏனைய அங்கத்தவர்கள் ஆவார்கள்.

**26.** இஸ்லாமிய சட்டத்தின் ஒரு மூலாதாரமாகக் கருதப்படுகின்ற .................................................... இல் நபி (ஸல்) அவர்களின் பின்னர் சமயம் தொடர்பாக சட்ட அறிஞர்களினால் பெறப்பட்ட ஏகோபித்த தீர்ப்புகள் அடங்கியுள்ளன.

**27.** பெண்களுக்கெதிரான எல்லா விதமான பாராபட்சங்களையும் அகற்றுவதற்காக ................................ உடன்பாடு நிறைவேற்றப்பட்டுள்ளது.

**28.** 1978 அரசியல் யாப்பின்படி அரசின் நிருவாக செயற்பாடொன்றின் காரணமாக பிரசையொருவரின் அடிப்படை உரிமைகள் மீறப்படின் அது தொடர்பாக ................................................ இல் முறைப்பாடு செய்ய வேண்டும்.

**29.** ஒப்படைக்கப்படும் பொறுப்பை நிறைவேற்றுவது தொடர்பான கடப்பாடு ............................................ என அழைக்கப்படும்.

**30.** அபிவிருத்தியை அளவிடும்போது பொருளாதார அபிவிருத்தியை அளவிடப் பயன்படுத்தப்படும் அளவீடுகள் ...................................... அளவீட்டு வகையைச் சாரும்.

[பக். 3 ஐப் பார்க்க

● **31** தொடக்கம் **40** வரையான வினாக்களுக்குத் தரப்பட்டுள்ள விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து, அதன் **இலக்கத்தை** எதிரிலுள்ள **அடைப்புக்குறியினுள்** எழுதுக.

**31.** பின்வரும் முறைகளில் பிரதிநிதித்துவ ஜனநாயக நிருவாக முறையின்கீழ் நேரடியாக வாக்காளர்களிடம் கருத்துக் கேட்கும் முறையியல் எது?
(1) பொது மக்களுக்காக கருத்தரங்குகளை நடாத்துதல்
(2) வெகுசன ஊடகங்களின் மூலம் மக்களின் கருத்துகளைப் பெறுதல்
(3) ஆணைக்குழுக்கள் மூலம் மக்களிடம் சாட்சியம் கோருதல்
(4) ஒப்பங்கோடல் மூலம் கருத்துக்களை விசாரித்தறிதல் (......)

**32.** பின்வரும் எந்த நாட்டில் ஒற்றையாட்சி முறை நிலவுகிறது?
(1) பிரான்சு (2) இந்தியா
(3) நியூசிலாந்து (4) அமெரிக்க ஐக்கிய அரசுகள் (......)

**33.** பின்வரும் '**அ**' நிரலில் மோதல் வகைகளும் '**ஆ**' நிரலில் அதற்கான உதாரணங்களும் தரப்பட்டுள்ளன.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| (i) அரசியல் மோதல்கள் | (a) சிலுவையுத்தம் |
| (ii) சமய மோதல்கள் | (b) இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்திற்கும் இடையிலான மோதல் |
| (iii) நாட்டின் எல்லை தொடர்பான மோதல்கள் | (c) இந்துக்களுக்கும் ஹரிஜனங்களுக்கும் இடையிலான மோதல் |
| (iv) கோத்திரங்கள் குலங்கள் இடையிலான மோதல்கள் | (d) இந்தோனேசியாவிற்கும் கிழக்கு திமோருக்கும் இடையிலான மோதல் |
| | (e) ஈராக்கிற்கும் அமெரிக்க ஐக்கிய அரசுகளுக்கும் இடையிலான மோதல் |

'**அ**' நிரலுக்கேற்றவாறு '**ஆ**' நிரலிலுள்ள உதாரணங்களை ஒழுங்குபடுத்தும்போது சரியான ஒழுங்கு முறையைக் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.
(1) d, a, b, c (2) e, b, a, c (3) d, a, e, c (4) c, a, b, e (......)

**34.** 13 ஆம் அரசியல் யாப்புத் திருத்தத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த பட்டியலில் அடங்கும் ஒரு சோடி விடயங்களைக் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.
(1) அரச பாதுகாப்பு மற்றும் வெளிநாட்டு விவகாரங்கள்
(2) உள்ளூராட்சி சபை விவகாரங்கள் மற்றும் மாகாணங்களில் வீடுகளை நிருமாணித்தல்
(3) காணி மற்றும் நீர்ப்பாசனம்
(4) விவசாயம் மற்றும் கமநல சேவைகள் (......)

**35.** சட்டத்தின் அடிப்படை நோக்கமாவது,
(1) நாட்டின் சகல பிரசைகளுக்கும் சமாதானத்தைப் பெற்றுக்கொடுத்தல்
(2) நாட்டிலுள்ள சகல பிரசைகளுக்கும் நியாயம் வழங்குதல்
(3) நாட்டிலுள்ள சகல குற்றவாளிகளுக்கும் தண்டனை வழங்குதல்
(4) நாட்டின் நீதித்துறையின் சுயாதீனத்தைப் பாதுகாத்தல் (......)

**36.** உயர் நீதிமன்றத்தினால் விசாரிக்கப்படுகின்ற வழக்குகள் மாத்திரம் அடங்கியுள்ள தொகுதி யாது?
(1) அரச விரோத சதிகள், விவாகரத்து வழக்குகள், கொலைகள்
(2) கற்பழிப்பு, கொலை முயற்சி, எல்லா காணி வழக்குகளும்
(3) கொலைகள், கற்பழிப்பு, அரச விரோத சதிகள்
(4) கற்பழிப்பு, சொத்து வழக்கு, காணி பகிர்வு வழக்குகள் (......)

**37.** ஜனநாயக சமுதாயமொன்றில் ஒரு பிரசை நிறைவேற்ற வேண்டிய சட்ட ரீதியான கடமை,
(1) விசேட தேவைகளுடையோருக்கு உதவுதல்
(2) பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல்
(3) ஆசிரியர்களுக்கு மதிப்பளித்தல்
(4) பழக்கவழக்கங்கள், சம்பிரதாயங்கள் ஆகியவற்றுக்கு மதிப்பளித்தல் (......)

**38.** பின்வரும் நிறுவனங்களில் பல்வேறு துறைகள் சார்பான பணிகளைச் செயற்படுத்த ஆலோசனைக் குழுக்களை நியமிக்கக்கூடிய நிறுவனம் எது?
(1) மாகாண சபை (2) மாநகர சபை (3) நகர சபை (4) பிரதேச சபை (......)

**39.** மனித செயற்பாடுகள் காரணமாக ஏற்படும் சூழல் பிரச்சினைகள் மாத்திரம் அடங்கியுள்ள விடை யாது?
(1) காட்டுத் தீ, அமில மழை, ஓசோன்படையின் அடர்த்தி குறைதல்
(2) சூறாவளி, சுனாமி, அமில மழை
(3) அமில மழை, காலநிலை மாற்றங்கள், ஓசோன்படை மெல்லியதாகுதல்
(4) வறட்சி, மண்சரிவு, அமில மழை (......)

**40.** பின்வருவனவற்றுள் மொத்த சர்வதேச துறையினையும் உள்ளடக்கும் விதத்தில் கட்டியெழுப்பப்பட்டுள்ள அமைப்பு எது?
(1) பொதுநலவாய அமைப்பு (2) ஐக்கிய நாடுகளின் அமைப்பு
(3) சார்க் அமைப்பு (4) நேடோ அமைப்பு (......)

**

[பக். 4 ஐப் பார்க்க

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

**62 | T | I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2015 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2015 டிசெம்பர்
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2015**

පුරවැසි අධ්‍යාපනය හා ප්‍රජා පාලනය I, II
**குடியுரிமைக் கல்வி மற்றும் சமூக நிர்வாகம் I, II**
Citizenship Education & Governance I, II

## (62) குடியுரிமைக் கல்வி மற்றும் சமூக நிர்வாகம் II

※ **முதலாம்** வினா கட்டாயமானதாகும்.
※ **முதலாம்** வினாவும் வேறு **நான்கு** வினாக்களும் உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

**1.** (i) நேரடி ஜனநாயகத்தின் உத்திகள் **இரண்டைப்** பெயரிடுக.

(ii) தேசிய அரசாங்கங்களின் உருவாக்கத்தின்போது கடந்து வந்த வளர்ச்சிப் பருவங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(iii) அரசியல் கட்சி முறையின் **இரண்டு** வகைகளைப் பெயரிடுக.

(iv) பண்டங்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தியின்போது பயன்படுத்தப்படுகின்ற உற்பத்திக் காரணிகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(v) சட்டமா அதிபரின் பணிகள் **இரண்டை** எழுதுக.

(vi) நியாயபூர்வமாகவும் தாமதமின்றியும் நீதியை நிலைநாட்டாமையினால் ஏற்படக்கூடிய **இரண்டு** பிரதிகூலங்களைக் குறிப்பிடுக.

(vii) சமுத்திர நீர் மாசடைதலில் செல்வாக்குச் செலுத்தும் மாசுக் காரணிகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(viii) பலம் வாய்ந்த நாடுகள் பலவீனமான நாடுகள் மீது செல்வாக்குச் செலுத்துகின்ற **இரண்டு** துறைகளைக் குறிப்பிடுக.

(ix) முதலாளித்துவ பொருளாதார முறையின் **இரண்டு** அடிப்படை இயல்புகளைக் குறிப்பிடுக.

(x) தற்காலத்தில் நாடுகளுக்கு வெளிநாட்டுதவி வழங்கப்படுகின்ற **இரண்டு** முறைகளைக் குறிப்பிடுக

(02 × 10 = 20 புள்ளிகள்)

**2.** ஒரு நாட்டில் நல்லாட்சி ஏற்படுவதற்கு ஜனநாயகம் உரிய முறையில் செயற்பட வேண்டும்.

(i) பண்டைய காலத்தில் இலங்கையிலும் இந்தியாவிலும் நிலவிய ஆட்சி முறைகளில், ஜனநாயக ஆட்சி முறையின் சில இயல்புகள் காணப்பட்டமையை எடுத்துக்காட்ட ஒரு நாட்டிலிருந்து **ஒரு** உதாரணம் வீதம் தருக. (02 புள்ளிகள்)

(ii) ஜனநாயக ஆட்சி முறையொன்றில் காணக்கூடிய இயல்புகள் **மூன்றைப்** பெயரிடுக. (03 புள்ளிகள்)

(iii) ஜனநாயகச் சமுதாயமொன்றில் சுயாதீனமான வெகுசன ஊடகங்களின் மூலம் ஆற்றப்பட வேண்டிய பணிகள் **மூன்றைக்** குறிப்பிட்டு, அவற்றில் **ஒன்றின்** முக்கியத்துவத்தை விளக்குக. (05 புள்ளிகள்)

**3.** தற்கால உலகின் பெரும்பாலான நாடுகளை பல்கலாசார சமூகங்களாக அறிமுகப்படுத்தலாம்.

(i) பல்கலாசார சமூகமொன்று உருவாவதில் செல்வாக்குச் செலுத்துகின்ற **இரண்டு** காரணிகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) பல்கலாசார சமூகத்தின் நிலவுகைக்காக நல்லாட்சியில் காணப்பட வேண்டிய **மூன்று** காரணிகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) பல்கலாசார சமூகத்தைச் சேர்ந்த மக்கள் ஒற்றுமையாகவும் ஒத்துழைப்புடனும் வாழ வேண்டும் என்பதை **மூன்று** விடயங்களின் அடிப்படையில் விளக்குக. (05 புள்ளிகள்)

[பக். 5 ஐப் பார்க்க

**4.** மனிதர்கள் தமது தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றிக் கொள்வதற்காக பல்வேறு பொருளாதாரச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

(i) 'விருப்பங்கள்' என்றால் என்ன என்பதனைச் சுருக்கமாக விளக்குக. (02 புள்ளிகள்)

(ii) சோசலிச பொருளாதார முறையின் அடிப்படை இயல்புகள் **மூன்றைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) (a) சந்தைப் பொருளாதார முறை என்பதன் மூலம் அறியப்படுவது என்ன?

(b) சந்தைப் பொருளாதார முறையொன்று உருவாவதில் செல்வாக்குச் செலுத்தும் **மூன்று** காரணிகளைக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

**5.** மோதல் ஒன்று உருவாவதற்கு நபர்களுக்கிடையே ஏற்படுகின்ற வெவ்வேறு கொள்கைகள் மற்றும் சகிக்க முடியாத தன்மைகள் காரணமாகக் கூடும்.

(i) எளிய தன்மையில் இருந்து சிக்கல் தன்மை வரை நிரற்படுத்தப்படுவதற்கேற்ப மோதல் ஒன்றின் ஆரம்ப நிலைகள் **இரண்டைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) மோதலொன்றைத் தீர்த்துக்கொள்ளும்போது மோதலுடன் தொடர்புடைய சகல தரப்பினராலும் பின்பற்றப்பட வேண்டிய **மூன்று** செயன்முறைகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) மோதலைச் சமாதானமாகத் தீர்த்துக் கொள்வதனால் பெறப்படும் அனுகூலங்கள் **மூன்றைக்** குறிப்பிட்டு, அவற்றுள் **ஒன்றை** விளக்குக. (05 புள்ளிகள்)

**6.** "சட்டத்தை அறியாதிருத்தல் விடுவிக்கப்படுவதற்கு ஒரு காரணமாக அமைய மாட்டாதாகையால், எல்லா பிரசைகளும் சட்டம் பற்றிய விளக்கத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்."

(i) சட்டத்தின் குணவியல்புகள் **இரண்டைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) குற்றவியல் சட்டத்தின் கீழ் தண்டனை பெறக்கூடிய குற்றங்கள் **மூன்றைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) இலங்கையில் செயற்படுகின்ற நீதிமன்ற வகைகள் **மூன்றைப்** பெயரிட்டு, அவற்றுள் **ஒன்றின்** செயற்பாட்டை விளக்குக. (05 புள்ளிகள்)

**7.** நிலையான அபிவிருத்திக்காக வளங்களை புத்திசாதுரியமாகப் பயன்படுத்துதல் அவசியமாகும்.

(i) நிலையான அபிவிருத்திக்காக நிறைவேற்றப்பட வேண்டிய **இரண்டு** தேவைப்பாடுகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) இலங்கையில் சூழல் பாதுகாப்பு தொடர்பான சட்ட மூலங்கள் **மூன்றைப்** பெயரிடுக. (03 புள்ளிகள்)

(iii) சுற்றாடல் பாதுகாப்பிற்காக பிரசை ஒருவருக்குள்ள பொறுப்புக்கள் **மூன்றைக்** குறிப்பிட்டு, அவற்றில் **ஒன்றை** விவரிக்குக. (05 புள்ளிகள்)

* * *